உலகத் தமிழர் பேரவை
Global Tamil Forum

**உலகத் தமிழர் பேரவை ஊடக வெளியீடு**

**20/12/2023**

'இமாலயப் பிரகடனம்' அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் உள்ள அனைத்து இன சமூகங்களுக்கும் இடையிலான தேசிய உரையாடல் காத்திரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறான பௌத்த மதபீடங்களைச் சேர்ந்த மூத்த பௌத்த பிக்குகள் (சிறந்த இலங்கைக்கான சங்கம் அல்லது "SBSL") மற்றும் உலகத் தமிழர் பேரவையின் ("GTF") உறுப்பினர்களைக் கொண்ட 'தூதுக்குழு' டிசம்பர் 7 ஆம் தேதி முதல் 15, 2023 வரை இலங்கையில் முக்கியமான சந்திப்புகளை மேற்கொண்டது.

ஏப்ரல் 2023 இல் நாகர்கோட்டில் (நேபாளம்) அவர்கள் மேற்கொண்ட உரையாடலின் தொடர்ச்சியாக இரு தரப்பினரும் "இமாலயப் பிரகடனத்தை" உருவாக்கினார்கள். இதன் மூலம் இலங்கையில் உள்ள பல்வேறு இனங்களுக்குமிடையில் தொடர்ச்சியான உரையாடலை நிகழ்த்தவும், விளக்கவுமான அவர்களது முயற்சிகளை எளிதாக்கியுள்ளார்கள். "இமாலயப் பிரகடனம்" இலங்கையில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டு அனைத்துத் தரப்பினரதும் உயர்பீடங்களையும் சந்தித்து, ஒப்படைக்கப்பட்டுக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பல்வேறு மதத்தவர்களிடம் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஊக்குவித்தலானது, சமாதானத்தைக் கட்டியெழுப்பும் இந்த முயற்சிக்கு அடிப்படையானது. எனவே இந்த முன்னெடுப்பு மதத் தலைவர்களை மையமாகக் கொண்டிருந்தது. நான்கு பௌத்த பிரிவுகளின் மகாநாயக்க தேரர்கள், நல்லை ஆதீனம், கொழும்பு கர்தினால், யாழ் பிஷப், தேசிய கிறீஸ்தவ கவுன்சிலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொழும்பு பிஷப் மற்றும் அகில இலங்கை ஜமாயத்துல் உலமாத் தலைவர்கள் ஆகியோர் இதில் உள்ளடங்கியிருந்தனர்.

இலக்கினை அடைவதற்கான அரசியல் செயற்பாட்டின் முக்கியத்துவம் கருதி ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், பெரும்பாலான தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியமான அரசியல் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் சபாநாயகர் ஆகியோரை, இக்குழுவானது சந்தித்து உரையாடியுள்ளது.

நாட்டின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு பௌத்த விகாரைகளை முதன்மையான வழிமுறையாகப் பயன்படுத்தியவரும், பெரும்பான்மை சமூகத்தினரிடையே கணிசமான ஆதரவுடைய கட்சியின் தலைவரும் என்றவகையில் மகிந்தவை சந்தித்திருந்தோம்.

'தேசிய உரையாடலை' தொடங்குவதற்கான உண்மையான, நேர்மையான முயற்சியாக பெரும்பான்மை சமூகத்தினரிடையே கணிசமான ஆதரவைப் பெற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் குறைந்த நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்ற கட்சிகளின் தலைவர்கள் என அனைவரையும் இந்தத் தேசிய உரையாடலில் கட்டாயம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதே GTF , SBSL ஆகிய அமைப்புகளின் கூட்டு முடிவாகும். எங்கள் கூட்டு அழைப்பை ஏற்ற அனைவரையும் சந்திக்க எல்லா

முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டோம். எங்கள் கூட்டு முயற்சியில் சந்தேகம் கொண்டு எங்களைச் சந்திக்காதவர்களுக்கு எங்களைச் சந்தித்து உரையாடுமாறு நாங்கள் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாடாளுமன்ற சபாநாயகர் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்ற வளாகத்தில் எங்களோடு (கூட்டுத் தூதுக்குழு) கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தார். வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த முக்கிய சிவில் சமூக உறுப்பினர்கள், 'அரகலயா' பிரதிநிதிகள் மற்றும் மூன்று மொழிகளிலும் அமைந்த முக்கிய ஊடக நிறுவனங்களைச் சார்ந்த ஊடகவியலாளர்களை சந்தித்திருந்தோம். இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிஸ், ஜப்பான், ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, பிரான்ஸ், கனடா, சர்வதேச செஞ்சிலுவை சங்கம், ஐ.நா ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொழும்பில் செயற்படும் பொருத்தமான இராஜதந்திர சமூகப் பிரதிநிதிகளை சந்தித்திருந்தோம்.

கடந்த ஒரு வார காலப்பகுதியில் மதிப்பிற்குரிய தலைவர்கள் மற்றும் கருத்துருவாக்கிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்களைச் சந்தித்து உரையாடியிருந்தோம். இந்த விடயங்களுக்கு இலங்கையின் மூன்று மொழி ஊடகங்களும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளை வெளியிட்டிருந்தன. இந்தக் கூட்டங்கள் ஒவ்வொன்றின் போதும் எங்களுக்குக் கிடைத்த பேராதரவு ஊக்கமளிப்பதாகவும், நாங்கள் கணித்ததை விட அதிகமாகவும் இருந்தது.

இது SBSL மற்றும் GTF மேற்கொண்டுள்ள பிரத்தியேகமான முன்முயற்சியாகும். இதில் எந்த வெளி அரசியல் சக்திகளினதும் தலையீடு இல்லை என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். பல தசாப்தங்களாக எல்லா இனங்களிடேயேயும் நிலவி வந்துள்ள சந்தேகங்களையும் அச்சங்களையும் அகற்றி சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை மேம்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். உதாரணமாக, தமிழ் மக்களின் கண்ணோட்டத்தில், அரசியல் தீர்வுக்கான எந்தவொரு முயற்சியையும் பௌத்த பிக்குகள் முறியடித்தே வந்துள்ளார்கள். அதே நேரத்தில் செல்வாக்கு மிக்க புலம்பெயர் தமிழ்ச் சமூகம் நாட்டை அழித்து அதன் முன்னேற்றத்தைத் தடுப்பதில் குறியாக இருப்பதாகச் சிங்களச் சமூகம் சிந்திக்கிறது. எனவே, இரண்டு 'எதிர்நிலைக் கருத்துடையோர்கள்' இடையே ஒரு உரையாடல் தேவையானதாகும். அத்தகைய ஒரு செயல்முறையானது,

நாடு முழுவதும் பரவலாகும் வேளையில் , தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உகந்த சூழல் உருவாகும். ஆனால் அரசியலாளர்களின் 'சிந்தனைப் போதாமையால்' இந்தப் பணி முன்னெடுக்கப்படாமல் மீண்டும் மீண்டும் இலங்கை அரசியல் தோல்வியடைந்து வந்துள்ளது. இலங்கை எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதாரச் சவால்களினால் தோன்றியுள்ள புதிய விழிப்புணர்வானது இந்த முயற்சிக்கான காலகட்டதை சரியானதாகத் தோற்றுவித்துள்ளது.

'நாகர்கோட் உரையாடல்' பல்வேறு சிக்கலான விடயங்களை சம்பந்தப்பட்ட சக்திகளுடன் உரையாடி ஒருமைப்பாட்டை எட்டியிருந்தது. எனவே முற்போக்கான கண்ணோட்டத்தைக் கொண்ட இரு தரப்புப் பிரிவுகளால் மட்டுமே மெய்யான செயல்முறையை ஆரம்பிக்க முடியும். மேலும், இவ்வாறான முன்னெடுப்பைப் பலவீனப்படுத்துவதற்கும் தோற்கடிப்பதற்கும் முயலும் சக்திகளைக் கையாளுவதற்கு இந்த விடயத்தை முன்னெடுப்பதற்கான உரிய காலகட்டத்தைப் பெறும்வரை இந்தச்

செயல்முறை இரகசியமாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். உலகம் முழுவதும் இவ்வாறான அணுகுமுறையே பின்பற்றப்பட்டு வந்துள்ள நடைமுறையாகும்.

மேலதிகமாக, இந்த முன்முயற்சியின் மூலம் சமூகங்களுக்கிடையில் இந்த அளவிலான தேசிய உரையாடலை சட்டப்பூர்வமாக ஆரம்பிப்பதற்கு, நாட்டின் அரச தலைவரை முறையாக ஈடுபடுத்துவது உட்பட சில நெறிமுறைகளைப் பின்பற்றி உரிய கால அட்டவணையை ஏற்பாடு செய்வதென்பது எங்களது முக்கிய தேவையாக இருந்தது.

"இமாலயப் பிரகடனம்", அடிப்படையில், SBSL மற்றும் GTF அமைப்புகளுக்கு இடையேயான ஒரு கட்டமைப்பு ஒப்பந்தமாகும். இது அனைத்து மக்களுக்கும் சிறந்த இலங்கைக்கான பார்வையை வெளிப்படுத்த வழிகாட்டும் ஆவணம் என்று நாங்கள் நம்புகிறோம். இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்காகத் தேசிய உரையாடலைத் தொடங்குவது முக்கியமானது.

இறுதியில் மக்களிடையேயான தேசிய உரையாடலும் அவர்கள் மேற்கொள்ளும் அரசியல் செயல்முறைகளும்தான் நாட்டில் அரசியல் விளைவுகளுக்கு வழிவகுக்கும். எங்கள் கூட்டு முயற்சியானது, அத்தகைய செயல்முறையை எளிதாக்குவதற்கும், அரசியல் முடிவுகள் மூலம் அனைத்து மக்களும், சமூகங்களும் திருப்தியடையக்கூடிய நம்பிக்கையான சூழலை உருவாக்குவதற்குமான மட்டுப்படுத்தப்பட்ட முயற்சியாகும்.

பரந்துபட்ட நோக்கில் எந்தவொரு இனத்தவராலும் சர்ச்சைக்குரியதாகக் கருதப்படும் கருத்துக்கள் மற்றும் சொல்லாடல்களைத் தவிர்த்து 'இமாலயப் பிரகடனம்' என்பது தமிழ்ச் சமூகத்திற்கு முக்கியமான பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இது நாட்டின் பன்மைத்தன்மையை, சமத்துவமான குடியுரிமையை வலியுறுத்துகிறது.

தற்போதுள்ள அரசியலமைப்பு விதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது உட்பட, மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு, பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் முக்கியத்துவத்துவம், அனைத்துலக உடன்படிக்கைகளுக்கு இணங்குவது போன்ற அனைத்தையும் வலியுறுத்துகிறது.

இந்த முன்முயற்சியும் பன்மைத்துவம், அதிகாரப் பகிர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கான பிரகடனமும் பௌத்த பீடங்களின் பிரதான பீடாதிபதிகள் உட்பட நாட்டிலுள்ள முக்கியமான அனைத்துச் சக்திகளின் ஒப்புதலையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுள்ளது. இவை உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகும். இவை நாட்டைச் சிறந்ததாக மாற்றக் கூடியனவாகும். இந்தப் பிரகடனம் உடைக்கவே முடியாத வார்ப்பிரும்புகளால் எழுதப்படவில்லை. தேசிய உரையாடல் முன்னேறிச் செல்லும்போது இந்தப் பிரகடனத்தில் உள்ளவற்றைத் தேவைக்கேற்ப மாற்றலாம் மற்றும் திருத்தலாம்.

இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள சில தமிழ் குழுக்களிடமிருந்தும், சில கட்சிகளிலிருந்தும் இந்த முன்முயற்சியை நோக்கி வெளியான விமர்சனங்களை நாங்கள் கவனித்தோம். இவை மிகவும் பிழையானவை என்பது எங்களுடைய தாழ்மையான வெளிப்பாடாகும். ஆயினும் தேசிய உரையாடலில் அவர்களது இந்தப் பங்களிப்பு எங்களை உற்சாகப்படுத்துகிறது.

உலகத் தமிழர் பேரவை
Global Tamil Forum

இலங்கையின் கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச விசாரணையின் கீழ் இலங்கையை வைத்திருக்க உலகத் தமிழர் பேரவை தொடர்ந்து கடுமையாக உழைக்கும். அரசியல் தீர்வு விடயங்களைப் பொறுத்தவரையில், மக்களுக்கான நல்ல முடிவைப் பெறுவதற்கு, தேசிய உரையாடலைப் பரிந்துரைக்கின்றோம்.

தமிழ்ச் சமூகத்தில் உள்ள ஒரு சிலரால் இத்தகைய தவறான புரிதல்கள் வெளிப்படும் சூழலில், இது அரசியல் தீர்விற்காக அரசாங்கத்துடனோ அல்லது நாட்டின் ஏனைய தலைவர்களுடனோ பேச்சுவார்த்தை நடத்தும் நடவடிக்கையல்ல என்பதைத் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறோம். களத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களே உரிய நேரத்தில் அதனை மேற்கொள்ள வேண்டும். இனக்குழுக்களுக்கு இடையே அதிக புரிதலை வளர்ப்பதன் மூலம், உண்மையான பங்குதாரர்கள் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தும்போது, அதனைக் குழப்புவதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

SBSL மற்றும் GTF ஆகிய நாங்கள் வரையறுக்கப்பட்ட வல்லமையைக் கொண்ட அமைப்புகள் என்பதைப் புரிந்து கொண்டவர்கள். அதேவேளை, இந்த முயற்சி

இலங்கைக்கே உரிய தனித்துவத்தைக் கொண்டது. அத்தோடு இது ஒரு முதல் முயற்சி என்பதையும் நாங்கள் அறிவோம். இருபத்தைந்து மாவட்டங்களிலும் மதங்களுக்கிடையிலான பணிக்குழுக்களை நிறுவும் நோக்கில், பல்வேறு மத நிறுவனங்கள், மதத் தலைவர்கள் குறித்தான எங்களது உடனடிக் கவனம் உள்ளது.

தேசிய உரையாடல் முன்னேறும்போது, உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள பல்வேறு புலம்பெயர் சமூகங்களின் மத்தியிலும் இதேபோன்ற உரையாடலைத் தொடங்குவது எமது நோக்கமாக உள்ளது. இதற்காகப் பௌத்த மதகுருமார்களை, புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளுக்குச் சென்று அவர்களுடன் நேரடியாக உரையாடுவதற்கும் மக்கள் அதில் பங்கெடுக்க வாய்ப்பளிக்குமாறும் அழைப்பு விடுக்க உள்ளோம்.

வெவ்வேறு மதத்தவர்களுக்கு இடையிலான புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றத்துடன், இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் நாட்டின் எதிர்கால நலன்கள் குறித்து அக்கறையுடனும் நம்பிக்கையுடனும் பலர் சிந்திக்கத் தொடங்குவார்கள் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.
இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் மற்றும் சர்வதேச சமூகத்திலும் உள்ள முக்கியமான சக்திகள் காட்டிய பேராதரவும், நம்பிக்கையும், ஊக்கமும் இந்த முயற்சியை மிகவும் காத்திரமாகவும் கனதியுடனும் முன்னெடுத்துச் செல்வதற்கான நன்நம்பிக்கையை எங்களுக்கு அளித்துள்ளது.
மேலும் அனைத்து இராஜதந்திர தூதரகங்களும் எமது முன்னெடுப்புத் தொடர்பாக வழங்கும் ஊக்கத்திற்காகவும் ஆதரவுச் சொல்லாடல்களுக்காகவும் எமது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

கடந்த வாரம் நாங்கள் சந்தித்த முக்கியமான பல்வேறு தலைமைச் சக்திகளின் சில கூற்றுகளையும், கருத்துகளையும் கீழே தருகின்றோம்.

**வணக்கத்துக்குரிய அஸ்கிரிய மகாநாயக்க தேரர்** -
"சகோதரத்துவம், சமத்துவம் மற்றும் சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட இலங்கையை நாம் கட்டியெழுப்பிய அன்றைய நாளே இலங்கை என்ற நாடு உண்மையான வெற்றியைக் கொண்டதாக அமையும்" என சமத்துவம் குறித்து விளக்கிய அஸ்கிரிய மகாநாயக்க தேரர், "எந்த மதத்தைச் சேர்ந்த மக்களையும் சமமாக உணரவைக்கும் போதுதான், வளமான மற்றும் வெற்றிகரமான இலங்கையை உருவாக்கியதாக எங்களால் கூற முடியும்" . மக்களிடம் செல்லும் மகத்துவமான பணியை நீங்கள் முன்னெடுத்துள்ளீர்கள். உங்களுக்கு என் வாழ்த்துகள்.

**வணக்கத்துக்குரிய மல்வத்தை மகாநாயக்க தேரர்** – "கடந்த காலங்களில் கட்சிகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட பல்வேறு உடன்படிக்கைகள் இல்லாமல் போவதற்கு வீதிக்கு இறங்கிய பௌத்த பிக்குகள்தான் காரணமென்று தமிழ் பிரதிநிதிகள் கூறியது உண்மைதான் (இந்தச் சந்திப்பின் ஒவ்வொரு கூட்டத்திலும் GTF பிரதிநிதிகள் பலதைக் குறிப்பிட்டிருந்தனர். "பண்டா - செல்வா ஒப்பந்தம்", "டட்லி - செல்வா ஒப்பந்தம்", தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடனான "போர்நிறுத்த ஒப்பந்தம்" மற்றும் அரசியலமைப்பின் "13 வது திருத்தம்" உட்படக் கடந்த காலத்தின் பல தலைவர்களுக்கிடையிலான ஒப்பந்தங்கள்). இனவாதத்தையும் வெறுப்பையும் போதிக்கும் இந்தப் பிக்குகளில் ஒரு சிறுபான்மையினர் உரத்த குரலில் இவற்றைப் பேசி வெற்றி பெற்றனர். ஏனென்றால் சமாதானத்தையும் சமத்துவத்தையும் விரும்பும் நம்மில் பெரும்பான்மையானவர்கள் அந்தச் சந்தர்ப்பங்களில் போதுமான அளவு உரத்த குரலில் பேசவில்லை. எதிர்காலத்தில் நாம் அதைச் செய்ய வேண்டும்.

**வணக்கத்துக்குரிய மல்வத்தை மகாநாயக்க தேரர்** அவர்கள் எங்களை (தூதுக்குழு) ஆசிர்வதிப்பதற்காகப் பிரித்தின் ஒரு பகுதியை ஓதியிருந்தார். மகாநாயக்க தேரர் பிரதிநிதிகளை மதிக்கும் மற்றும் நேசிக்கும் வேளைகளில் மட்டுமே தானாகப் பிரித் ஓதுவதை நாம் பின்னர் விளங்கிக் கொண்டோம்.

**வணக்கத்துக்குரிய அமரபுர மகாநாயக்க தேரர்** – "தனியாகச் செல்வதற்கு அன்பு, ஞானம், பொது அறிவு, கடினமாக உழைக்க வேண்டிய தேவை அவசியமில்லை. தனித்தனி வழிகளில் செல்வது எளிது. இருப்பினும், ஒன்றிணைவதற்கு, அன்பு, பொது அறிவு, ஞானம் ஆகியவற்றைக் கைக்கொண்டு நாம் கடினமாக உழைக்க வேண்டும். மக்களை ஒன்றிணைக்கும் மகத்தான வேலைத்திட்டம் ஒன்றினை நீங்கள் தொடங்குகிறீர்கள். இது எளிதாக இருக்காது. இதற்குக் கடின உழைப்புத் தேவைப்படும். உங்கள் வழியில் பல தடைகள் வரும். உறுதியையும், பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் நீங்கள் கைக்கொள்ளுங்கள். ஈற்றில் நீங்கள் வெற்றியடைவீர்கள். உங்களுக்காக நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.
பின்னர் அவருடன் இணைந்து ஆறு மகாநாயக்க தேரர்களும் எம்மை (தூதுக்குழு) ஆசீர்வதிக்க பிரித்தின் ஒரு பகுதியை ஓதினார்கள்.

**வணக்கத்துக்குரிய ராமான நிக்காய மகாநாயக்க தேரர்** –:
"நாம் அனைவருக்கும் சமமான இலங்கையை உருவாக்கும் போதுதான் நாட்டின் எந்தப் பகுதியிலும் பாதுகாப்பாக வாழ்வதை மக்கள் அனைவரும் உணர முடியும். இந்த

மகத்தான முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் உங்கள் அனைவரையும் நான் ஆசீர்வதிக்கிறேன்"

**வணக்கத்துக்குரிய நல்லை ஆதீனம் குருக்கள்** -: "இந்த முன்னெடுப்பினால் இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தீர்க்க முடியும் என்றால், நீங்கள் செய்யும் முயற்சி மதிப்பு வாய்ந்தது"

**வணக்கத்துக்குரிய யாழ்ப்பாண ஆயர்** -: "இந்த நாட்டில் தமிழர்களாகிய எங்களுக்கு வரலாறு கருணை காட்டவில்லை. பௌத்த மதகுருமார்களுடன் இணைந்து மிக முக்கியமானதொரு அடியினை நீங்கள் எடுத்து வைக்கிறீர்கள். சமத்துவம் மற்றும் நீதியின் அடிப்படையில் எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்றால், அது மிகவும் பெரியதொரு முயற்சியாக இருக்க வேண்டும். உங்களுக்கு என் நல்வாழ்த்துகள்."

**வணக்கத்துக்குரிய கொழும்பு பேராயர் கர்தினால் –**: "ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட இங்கு நிகழ்ந்த அநீதிகளுக்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் தீர்வு காண வேண்டும். மக்களிடம் சென்று தேசிய உரையாடல் மூலம் தீர்மானங்களைக் கொண்டு வருவது புதுமை படைத்த சிந்தனையாகும். ஆயர்கள் அனைவரும் இதனை ஆதரிப்பார்கள் என உறுதி கூறுகிறேன். உங்களுக்கு என் நல்வாழ்த்துகள்."

**வணக்கத்துக்குரிய அகில இலங்கை ஜமயத்துல் உலமா பொதுச் சபை –**: "இலங்கையில் உள்ள எல்லாச் சமூகங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த தேசிய உரையாடலை உருவாக்கும் இந்த முயற்சிக்கு நாங்கள் திறந்த மனதோடு ஆதரவளிக்கின்றோம். இந்தச் செயல்பாட்டில் நாங்கள் உங்களுக்கு எப்படி உதவியாக இருக்க முடியும் என்பதை எங்களுக்கு அறியத் தாருங்கள்.

**வணக்கத்துக்குரிய கொழும்பு ஆயர் (தேசிய கிறீஸ்தவ கவுன்சில்)** -:"இலங்கையில் உள்ள பல்வேறு சமூகங்கள் சார்ந்த பல்வேறு வேலைத்திட்டங்களில் பௌத்த பிக்குகளோடு இணைந்து பணியாற்றிய நெடிய வரலாற்றை நாங்கள் கொண்டுள்ளோம். உங்களது இந்த உன்னதமான முயற்சியின் ஆக்கபூர்வமான பெறுபேறுகளுக்காக நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைவர் மகிந்த ராஜபக்ச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சேனாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவருமான மனோ கணேசன், நாடாளுமன்ற

உறுப்பினர் கரு ஜயசூரிய, தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச மற்றும் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில்

கலந்து கொண்ட முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தேசிய உரையாடல் செயல்முறைக்கு ஆதரவாக ஊக்கமளிக்கும் சொல்லாடல்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் அவர்கள், "இந்த முன்னெடுப்பை நாம் பல ஆண்டுகளுக்கு முன்பே செய்திருக்க வேண்டும்" என்று குறைந்தது மூன்று தடவைகளாவது திரும்பத் திரும்பச் சொன்னார். பௌத்த மதகுருமார்களிடம், "நாங்கள் உங்களால்தான் பல ஆண்டுகள் பின்தங்கியுள்ளோம்" என்று கூறினார்.

யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் கிழக்கின் பல்வேறு நகரங்களில் சந்தித்த பெரும்பாலான சிவில் சமூக உறுப்பினர்கள் எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையுடன் இருந்தார்கள். இந்த முன்னெடுப்பை இலங்கையில் முதற்தடவையாக மேற்கொள்ளப்படும் முயற்சியாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

கொழும்பில் செயலாற்றும் தூதுவராலய இராஜதந்திர சமூகம் இந்த முன்னெடுப்புக்கு உந்துதல் அளிக்கும் வகையில் எங்கள் பிரதிநிதிகளை உற்சாகப்படுத்தும் சொல்லாடல்களைப் பகிர்ந்து கொண்டது.
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யூலி சுங் தனது ற்ரூவீற்றில், "சமூகங்களுக்கு இடையேயான புரிதலை விசாலமாக்குவதற்கும், நீடித்த நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான இந்த முயற்சியை நாங்கள் பாராட்டி வரவேற்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸ் தூதுவர் சிறி வோல்ட் தூதுக்குழுவுடனான தனது சந்திப்பின் பின்னர், "இந்தச் சந்திப்பும், ஐக்கியத்திற்கான தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட பன்மைத்துவமும் அமைதியும் கொண்ட இலங்கையை உருவாக்கும் முன்னெடுப்பிலான இமாலயப் பிரகடனத்தை ஆதரிப்பதென்பதும் எமக்குப் பெருமை தருவதாகும். நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்." என ரூவீற் செய்துள்ளார்.

-முற்றும்-

Media Contact: **Suren Surendiran**
Tel: **+44 (0) 7958 590196**
Skype: **surendirans**
Email: **secretary@globaltamilforum.org**
Twitter: **@GTFonline & @surendirans**

Notes: Global Tamil Forum (GTF) is an influential Tamil diaspora organisation - established in 2009 following the end of the armed conflict in Sri Lanka. GTF is absolutely committed to a non-violent agenda and it seeks lasting peace in Sri Lanka, based on justice, reconciliation and a negotiated political settlement.